

கடலூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களில் நடைபெற்ற பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (16.7.2025) எழும்பூர் இரயில் நிலையத்தில் பெருந்திரளான பொதுமக்கள் உற்சாகமாக வரவேற்றனர்.



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) மயிலாடுதுறை மாவட்டம், வழுவூர் முகப்பு சாலையில் கழகத்தின் சார்பில் நிறுவப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வெண்கல திருவுருவச் சிலையை திறந்து வைத்தார். இந்நிகழ்வில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தமிழ்நாடு அரசின் தில்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்ட கழகச் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன், குத்தாலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் மங்கை எம். சங்கர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ. இராமலிங்கம், கழக உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பி. கல்யாணம், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வி.எஸ். பிரபாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (16.7.2025) மயிலாடுதுறையில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார்.

### ‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற அடிப்படையில்

# மக்களோடு கூட்டணி அமைத்து வருகிறார் முதல்வர்!

## நெல்லையில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

நெல்லை, ஜூலை 17-

‘ஓரணியில் தமிழ்நாடு’ என்ற அடிப்படையில் மக்களோடு கூட்டணி அமைத்து வருகிறார் முதல்வர் என்றும் சில நடிகர்கள் சினிமாவில் நடிக்கும் போது லாக்அப் மரணங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு விட்டு அரசியல் கட்சி தொடங்கியவுடன் மக்கள் மேல் அக்கறை இருப்பதைப் போல் காட்டிக் கொள்கிறார்கள் எனவும்

நெல்லையில் கழக துணைப் பொதுச் செயலாளர்,கனிமொழி கருணாநிதி எம்.பி அவர்கள் செய்தியாளர்களிடம் பேட்டியின் போது தெரிவித்தார்.



கழக துணைப் பொதுச் செயலாளர் நாடாளுமன்ற கழக குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:-

அனைத்து தேர்தல்களிலும் வாக்காளர் பட்டியலில் குழப்பம் செய்து வாக்காளர்கள் சிலரை நீக்கம் செய்து, ஒரே இடத்தில் ஐந்தாயிரம் வாக்காளர்களை இணைத்து நியாயத்திற்கு புறம்பாக பா.ஜ.க மற்றும் கூட்டணியினர் பல இடங்களில் வெற்றி பெற்றுள்ளனர். இந்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ள பீகாரிலும் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்த பா.ஜ.க முயல்கிறது.

ஒரு திரைப்படம் மக்களுக்கு பல செய்திகளை சொல்லக்கூடிய ஒன்றாக இருக்கிறது. சில நடிகர்கள் சினிமாவில் நடிக்கும் போது லாக்அப் மரணங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு விட்டு அரசியல் கட்சி தொடங்கியவுடன் மக்கள் மேல் அக்கறை இருப்பதைப் போல் காட்டிக் கொள்கிறார்கள்.இது நகைச்சுவையாக பார்க்கப்படுகிறது. தற்போது லாக் அப் மரணங்களுக்கு எதிராக பேசி வருகின்றனர்.

மேலும் எங்களின் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணி மிகவும் பலமாக இருக்கிறது. அதே நேரத்தில் ஓரணியில் தமிழ்நாடு என்ற அடிப்படையில் மக்களோடு முதலமைச்சர் அவர்கள் கூட்டணி அமைக்கிறார். அதுவும் மிகச் சிறப்பாக சென்று கொண்டிருக்கிறது.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. தெரிவித்தார்.



திருச்சுழி அருகே கல்லூரணியில் உள்ள எஸ்.பி.கே. மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் பெருந்தலைவர் காமராஜர் வெண்கல சிலை திறப்பு விழா நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமை வகித்தார். சிலையை தூத்துக்குடி எம்.பி.கனிமொழி கருணாநிதி திறந்து வைத்தார். உடன் இராமநாதபுரம் எம்.பி.நவாஸ் கனி, விருதுநகர் சட்ட மன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், சிவகாசி மேயர் சங்கீதா இன்பம், திருச்சுழி ஒன்றிய செயலாளர் பொன்னுத்தம்பி, சந்தானப்பாண்டியன், கல்லூரணி இராசமாணிக்கம் ஆகியோர் இருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.07.2025 அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தை தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி, டாக்டர் அம்பேத்கர் திருமண மண்டபதில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் தி.சினேகா, தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன், மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், துணை மேயர் கோ.காமராஜ், மண்டலக்குழு தலைவர்கள் து.காமராஜ், வே.கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, சு.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.